දුරකථන / தொலைபேசி / Telephone ) 0112669192 , 0112675011 0112698507 , 0112694033 ) 0112675449 , 0112675280

ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 0112693866 ) 0112693869 ) 0112692913

විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e-mail )postmaster@health.gov.lk )

වෙබ්අඩවිය / இணையத்தளம் ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය / எனது இல / My No. )CF/EXV/08/2020

ඔබේ අංකය / உமது இல / Your No. )

දිනය / திகதி / Date ) 2020/03/04

# සෞඛ්‍ය, සහ දේශීය වෛද්‍ය සේවා අමාත්‍යාංශය
# சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு
# Ministry of Health & Indigenous Medical Services

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02 - 26 /2020

மாகாண சுகாதார செயலாளர்கள்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் இலங்கை தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

உரிய திணைக்கள தலைவர்களும்,

**சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குபதவிகளுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (01 ஆம் தடவை)**

சுகாதார அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குனர் மற்றும் பதவிகளின் பொருட்டு தரம் III ற்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தி பெற வேண்டிய முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை **2020/04/04** ஆம் திகதி சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்படும்.

02. **தகைமைகள் :-**

சுகாதார அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான (கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குனர் மற்றும்) பதவிகளில் தரம் III ற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப் பரீட்சையில் சித்தியடையாத அலுவலர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும்**

சுகாதாரம் சேவைகள் மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருடைய 02-90/2015 இலக்கம் உடையதும், 2015.08.12 திகதியுடையதுமான பொது சுற்றுநிருபக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012.07.27 திகதியன்று மின்னியலாளர், மற்றும் சினிமா இயந்திர இயக்குனர், கட்டுபாட்டு அறை இயக்குனர், தரம் III ல் 03 வருடங்களை கடந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்த வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இதன் பொருட்டு தோற்ற வேண்டிய அவசியமில்லை.

03. **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரிக்கு **2020/03/14** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முவரியிடப்பட்ட ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" கடித உறை ஒன்றினையும் வாய் மொழி/செயன்முறை பரீட்சைக்கு (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

விண்ணப்பமானது **A4** தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம்**

I முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. **பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்**

I ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

II பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதாரம் போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைசீனுதும்அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவிலுள்ள கடவுச் சீட்டு

06. **பரீட்சை நடைமுறை**

இப் பரீட்சையில் தாபன விதிக்கோவை 25 வினாக்கள் மற்றும் நிதிப்பிரமானம் 25 வினாக்களையும் அடிப்படையாக கொண்ட பல்தேர்வு வினாக்கள் 50 வினாக்களையுடைய வினாத்தாளிற்கு விடையளிக்க வேண்டும். நேரம் - 01 மணித்தியாலம். முழுப் புள்ளிகள் - 100. சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

07. பரீட்சை பாடத்திட்டம்

07.1. தாபன விதிக் கோவை

| | | |
|---|---|---|
| அத்தியாயம் II | - | சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறைவிதிகள். |
| அத்தியாயம் III | - | இடமாற்றம் செய்தல் |
| அத்தியாயம் XII | - | விடுமுறை |
| அத்தியாயம் XIII | - | புகையிரத ஆணைச்சீட்டு |

07.2 நிதிப்பிரமாணங்கள் 90, 101 தொடக்கம் 105 வரை.

08. பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. இச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை உமது நிறுவனத்தில் உள்ள சகல சுகாதார அமைச்சின் கீழ் பணிபுரியும் ஆரம்ப தொழிநுட்பம் சார்ந்த உத்தியோகத்தர் சேவை பிரிவின் (PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான சகல அலுவலர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு ஒழுங்கினை மேற்கொள்ளவும். (இந்த விபரங்களை www.health.gov.lk எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.)

**கவனிக்கவும் : - சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல சுற்று நிருபங்களில் ஏதாவது ஒவ்வாமைகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

Donald Murage
Deputy Director General (Admin) II
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

டொனல்ட் முரகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) 02
செயலாளருக்காக,
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு

EXV

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|

## மாதிரி விண்ணப்பப் படிவம்

சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை ஆரம்ப தொழிநுட்ப சேவை வகையின் (PL -03 -2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான கட்டுபாட்டு அறை இயக்குனர், மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர், மின்னியலாளர், சினிமா இயந்திர இயக்குனர் மற்றும் பதவிகளுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (01 ஆம் தடவை)

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்): ..........................................................

..........................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் : தமிழில்: ..........................................................

..........................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி: ..........................................................................................................

(ii) தரம் III க்கு நியமிக்கப்பட்ட திகதி: ..........................................................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................................

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

02. (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(தமிழில்)..........................................................................................................

(ஆங்கிலத்தில்)..................................................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம்:..........................................................................................

(இ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐

- மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம்:..........................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9'' x 4'' அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறைகள் இரண்டு இணைக்கப்பட்டு உள்ளதா? ..........................................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (சிங்களத்தில்): ..........................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..................................................

03. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் /தமிழ் /ஆங்கிலம்): ..........................................................

04 (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா?

..............................................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

..................................... ......

| முத்திரைக் கூண்டு |
|---|

05 **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ......................... பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ..................................... .....................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

06 **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................. ..............................................

பெயர் பெயரும் கையொப்பமும், திகதியும்.

07 **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி ........................................................... என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர்....................................... உத்தியோகத்தராக இன் நிறுவனத்தில் பணிபுரிகின்றார் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத படியால் ரூபா ................. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................................... .........................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

08 **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ..................................................... என்பவர் ................................................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ....................................

................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

தேவையற்றவற்றை கீறிடவும்